ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 12,140 — 1960 ජූනි 3 වැනි සිකුරාදා — 3.6.1960
12,140 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. 77. — உப உணவுப் பொருட்கள்—செத்தல் மிளகாய்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை நீக்கம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பகிரதன் ராமநாதன் தேவராஜன், பதில் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ஆகிய நான் இக்கட்டளையால், 1959 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4 ந் திகதி வெளியான 11,938 ம் இலக்க அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 70 ம் இலக்கக் கட்டளை 29.10.59 ம் திகதியைக் கொண்ட செத்தல் மிளகாய் சம்பந்தப்பட்ட விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 22 ந் திகதி மு.ப. 10 மணிக்கு மட்டக்களப்பில் கையொப்பமிடப்பட்டது.

பி. ஆர். தேவராஜன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மட்டக்களப்புப் பிரிவு.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.